ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


| வேணு : 9 | டிசம்பர் 2003 | கானம் : 5 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 97 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 78 | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 68 | 9 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை -72 | 13 |
| 7. | மாலே மணிவண்ணா - 15 | 15 |
| 8. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18 (தொடர்ச்சி) | 18 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 99 | 22 |
| 10. | செய்திகள் | 27 |
| 10. | பக்தர்களின் கவனத்திற்கு ! | 30 |


[illegible]

[illegible]

‘‘இந்திரியங்களை ஜயித்து மூன்று உலகங்களை வென்றாய், உன்னால் தோற்கடிக்கப்பட்ட அந்த இந்திரியங்களே அந்த நினைவினால் உன் மீது தீராத பகைகொண்டு உன்னை இப்பொழுது வென்றுவிட்டன’’ என்று மந்தோதரீ ஸ்ரீ ராமபிரானால் வீழ்த்தப்பட்ட இராவணனைப் பார்த்துக் கூறுகிறாள்.

**மந்தோதரீ விலாப: 114 ஸர்கம், யுத்தகாண்டம், —ஸ்ரீமத்ராமாயணம்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : பீம்ப்ளாஸ் தாளம் : ஆதி

*அவ்யாஜ கருணா மூர்த்திஸ்த்வமேவ*
*க்ருதஜ்ஞதா நஹி மே கிஞ்சிதபி - க்ருஷ்ண (அவ்யாஜ)*

*பஹுஸமயேஷு பஹுவிதமேவ*
*ரக்ஷிதோ஽ஹம் பக்ஷிவாஹன*
*க்ஷணமபி ந ஸ்மராமி தவ கருணாம்*
*ஸஞ்சரதி மன: லோகஸுகாதிஷு (அவ்யாஜ)*

*காமீ அஹம் போகீ அஹம்*
*அர்தார்த்தீ அஹம் கோபால*
*ரக்தோ஽ஹம் பத்தோ஽ஹம்*
*அஹங்காரேண அபத்தவசனோ஽ஹம் (அவ்யாஜ)*

*தவ சரணாம்புஜம் வினா ஸ்ரீலோல*
*நைவ கதிர்மே கோபால*
*விரக்த ஜன வினுத வ்ரஜராஜஸுத*
*லஜ்ஜித முரளீதர பூஜித பத (அவ்யாஜ)*

---

If there is faith, then there is no fate.

**- SRI YOGIRAMSURATKUMAR**

My Father alone exists - nothing else, nobody else.

**- SRI YOGIRAMSURATKUMAR**

## மதுரமான மஹனீயர் 97

இந்த முறை சந்திரகிரஹணம் அதிகாலையில் பிடித்து காலையில் சுமார் ஒன்பது மணி அளவில்தான் விட்டது. கிரஹணம் விட்ட சந்திரனை, அதாவது இரவில் பூரணமான சந்திரனைப் பார்த்த பிறகுதான் அன்று உணவு உட்கொள்ள வேண்டும். ஜகந்நாதன் என்ற பக்தருக்கு என்ன எண்ணம் தோன்றியது தெரியுமா? ‘எப்பொழுதும் க்ருஷ்ணனுடைய முகமே பூர்ணசந்திரன் போல் இருக்கின்றது என்று ஸ்ரீ ஸ்வாமிஜி சொல்வாரே! நாம் ஆகாயத்தில் இரவில் வரக்கூடிய சந்திரனுக்காக ஏன் காத்திருக்க வேணடும்? க்ருஷ்ணனுடைய முகத்தைப் பார்த்துவிட்டு சாப்பிட்டுவிடலாமே’ என்று தோன்றியது. அதன்படி செய்தும்விட்டார்.

‘நாம் ஸ்வாமிஜியை தரிசனம் செய்ய இன்று சென்றால் நிச்சயம் இதைப்பற்றி கேட்பார்’ என்று அவருக்குத் தோன்றியது. அவர் தரிசனத்திற்கு வரும்பொழுது ஸ்ரீ ஸ்வாமிஜி, பிரேமிகபவனத்தின் வெளியில் நாற்காலியிலே அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் சிரித்துக்கொண்டே, ‘‘இன்று கிரஹணம் ஆயிற்றே! உணவு உட்கொண்டாயா? இரவில்தான் உணவு உட்கொள்ள வேண்டும் என்று சொல்கின்றார்களே’’ என்று கேட்டுக்கொண்டே வந்தவர், ‘‘க்ருஷ்ணனுடைய முகமே பூர்ணசந்திரனுக்குச் சமம் என்று நினைத்து க்ருஷ்ணனுடைய முகத்தைப் பார்த்துவிட்டு சாப்பிட்டாயாக்கும்’’ என்றவுடன் ஜகந்நாதனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

தான் செய்தது ஸ்வாமிஜிக்கு தெரிந்ததில் அவருக்கு ஆச்சரியம் இல்லை. தன்னைப் பார்த்தவுடன் இதைத்தான் கேட்பார் என்று அவர் நினைத்ததையும் ஸ்ரீ ஸ்வாமிஜி பூர்த்தி செய்து வைத்ததுதான் அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் ராமாயணம் போன்ற கிரந்தங்களில் பகவானுடைய ஸாந்நித்யம் நிறைந்திருக்கின்றது என்று கூறுகின்றீர்களா?*

பதில் : ஆம், அதில் சந்தேகமென்ன? ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் ராமாயணம் போன்ற கிரந்தங்களை எவ்வளவோ முறை பாராயணம் செய்கின்றோம். அந்த சரித்ரங்களை கேட்கின்றோம். ராமாயணத்தை பாராயணம் செய்யும்பொழுது, 'இதோ ஹனுமார் கிளம்பிவிட்டார், சீதையை பார்க்க போகின்றார்', என்று படிக்கும்பொழுதே ஆர்வம் ஏற்படுகின்றது. அதுபோல், ஸ்ரீமத் பாகவதம் பாராயணம் செய்யும் பொழுது, 'இதோ பிரஹ்லாதன் ஹிரண்யகசிபு மடியில் உட்கார போகின்றான். ஹிரண்யகசிபு அவனிடம் நீ படித்ததிலேயே உத்தமமானது என்ன என்று கேட்க போகின்றான். பிரஹ்லாதன் நவவிதமான பக்தியை உபதேசம் செய்ய போகின்றான்' என்ற ஒரு ஆர்வம் ஏற்படுகின்றது. இதுவே, இந்த கிரந்தங்களில் மஹரிஷிகள் தங்கள் தவத்தை வைத்திருக்கின்றார்கள் என்பதற்கு பிரமாணம்.

*கேள்வி : பகவான், வாமன மூர்த்தியாக வந்து பலிசக்கரவர்த்தியிடம் மூன்று அடி மண்டியிட்டு பிறகு உலகளந்த பெருமாளாக மாறி பலிசக்கரவர்த்தியையே தடுத்தாட்கொண்டார் என்று பார்க்கின்றோம். இதனுடைய தத்துவம் என்ன?*

பதில் : ஒரு ஸமயம், திருவண்ணாமலையில் வாழ்ந்து அருளாட்சி புரிந்து வந்த பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களைப் பார்ப்பதற்காக வந்த ஒரு பெரிய தனவந்தர், 'என்னிடம் உள்ள எந்த பொருளையும் தங்களுக்கு அர்ப்பணிக்க சித்தமாக உள்ளேன். வேண்டுமானால் என்னிடம் உள்ள எல்லாவற்றையுமே தங்களுக்கு தர சித்தமாக உள்ளேன்' என்று கூறினார். அதற்கு அந்த மஹானோ, "I don't want all your possessions, but I want the possessor" என்று கூறினார். இதுதான் வாமன அவதாரத்தினுடைய தத்துவம். நாம் நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணித்துவிட்டு நம்மை

அர்ப்பணிக்கவில்லை என்றால் என்ன பலன்? நம்மையே பகவானுக்கு கொடுக்கவேண்டும்.

*கேள்வி : குரு, ஒருவருக்கு ஒருமுறைதான் அருள் செய்வார் என்று கூறுகின்றீர்களா?*

பதில் : அப்படி சொல்லவில்லை. நான் என்ன சொல்ல வருகின்றேன் என்பதை ஒரு உதாரணம் மூலம் விளக்குகின்றேன். ஒரு தந்தை மிகவும் கஷ்டப்பட்டு பொருள் ஈட்டி வைத்துள்ளார். அவருடைய மகன் சொந்தமாக வியாபாரம் ஆரம்பிப்பதற்காக முதலீடாக பணம் கேட்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். அந்த பணத்தை பலவாக பெருக்கினால்தான் தந்தை சந்தோஷப்படுவார். மேலும் மேலும் பணம் கொடுப்பார். ஆனால், அந்த முதலீட்டையே நஷ்டம் ஆக்கிவிட்டான் என்றால், நாம் கஷ்டப்பட்டு சேர்த்த பொருளை இவனுக்கு பன்மடங்காக பெருக்க தெரியவில்லை. ஆகவே, அவனிடம் பொருளை கொடுக்க வேண்டாம், நாமே நம்மிடம் உள்ள பொருளை காப்பாற்றலாம் என்று முடிவுக்கு வந்து விடுவார்.

அதுபோல், குருவானவர் சீடனுக்கு உபதேசம் செய்யும்பொழுது, தான் அரும்பாடுபட்டு சேர்த்து வைத்த தவத்தின் ஒரு பகுதியை தருகின்றார். அதை மேலும் மேலும் ஜபம் செய்து உரு ஏற்றினால், குரு சந்தோஷப்பட்டு மேலும் மேலும் தவத்தின் வலிமையை அவனுக்கு தருவார். சோம்பேறித்தனமாக இருந்து அவர் கொடுத்த உபதேசத்தை உரு ஏற்றவில்லை என்றால் நம்முடைய தவத்தை கொண்டே இவனை காப்பாற்றலாம். இவனிடம் நம்முடைய தெய்வீக சக்தியை கொடுத்தால் இவனுக்கு அதை வைத்துக்கொண்டு மேலும் மேலும் பெருக்கிக்கொள்ள தெரியவில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுவார்.

*கேள்வி : பகவானிடம் எதையாவது பிரார்த்தனை செய்து கொண்டால் அதனை உடனே நிறைவேற்றிவிட வேண்டுமா?*

பதில் : அதில் சந்தேகமென்ன? உடனே நிறைவேற்றத்தான் வேண்டும். நாம் எதையும் பகவானிடம் பிரார்த்தனை செய்து அது நமக்கு கைகூடுமானால் பகவானுக்கு உடனே நன்றி சொல்லி பழக வேண்டும். நன்றி சொல்வதனுடைய ஒரு வெளிப்பாடுதான் பிரார்த்தனை நிறைவேற்றுதல்.

*கேள்வி : குருவிடம் செல்லும்பொழுதே என்னை அறியாமல் எனக்கு ஒரு பயம் வருகின்றது. அதே சமயத்தில் அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையும் இருக்கின்றது. இது மாதிரியான ஒரு அவஸ்தையில் தவிக்கின்றேன் நான். எனக்கு ஏன் இப்படி இருக்கின்றது?*

பதில் : குருவும், தெய்வமும் அன்பே உருவானவர்கள் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. இருந்தாலும் குருவிடமும் தெய்வத்திடமும் ஒரு பயம் வேண்டும். அறியாத வயதில் இருக்கும் குழந்தைக்கு தன்னிடம் பாசமுள்ள தகப்பனாரிடம் ஒரு பயம் இருக்கின்றது. நாம் தவறான கார்யங்களை செய்தால் தகப்பனார் தண்டிப்பார் என்று பயம் வருகின்றது அல்லவா? அதுபோல், குருவிடமும் தெய்வத்திடமும் பயம் இருந்தால்தான் நாம் அதர்மமான கார்யங்களில் பிரவேசிக்காமல் இருப்போம். ஆகவே, அந்த பயம் இருக்க வேண்டும்.


ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.

# வேத கதைகள் -78

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## வாமதேவ்யம் ஸாமாவின் பெருமை

முன்பு ஒரு சமயம் ஜோதிஷ்டோமம் என்ற யாகமானது ஏதோ ஒரு காரணத்தால் தேவர்களிடமிருந்து விலகி வெளியில் சென்றது. ஸோம யாகங்கள் ஏழுவிதமாக உள்ளது. 1. அக்னிஷ்டோமம், 2. அத்யக்னிஷ்டோமம், 3. உக்த்யம், 4. ஷோடஸி, 5. வாஜபேயம், 6. அதிராத்ரம், 7. அப்தோர்யாமம், ஆனால், இந்த ஏழு யாகங்களுக்கும் ஜோதிஷ்டோமம் என்பது பொதுவான பெயர். இவ்விதம், பெருமை பெற்ற ஜோதிஷ்டோம யாகமானது வெளியேறியபொழுது அதன் பயனான அன்னம் முதலியதும் வெளியேறியது. அப்பொழுது தேவர்கள் ஒன்று கூடி ஒருவருக்கு ஒருவர் விசாரணம் செய்தனர்.

நம்மைச் சார்ந்த இந்த ஜோதிஷ்டோமம் என்ற யாகமும் அதன் பயனும் நம்மை விட்டு வெளியேறிவிட்டன. அதைத் தேடுவோம் என்று தீர்மானித்தனர். பிறகு எவ்விதம் தேடுவது என்று விசாரித்து ப்ராம்மணம், ருத்விக்குகள், யாகம் செய்பவர்கள் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுக்கள் இவைகளை தேடுவதற்கு உபாயமாக விசாரித்து காயத்ரி முதலிய சந்தஸ்களால் யாகம் செய்பவர்களுக்கு தீக்ஷினியேஷ்டி என்ற இஷ்டியால் ஒரு ஸம்ஸ்காரத்தை அளித்தனர். அந்த இஷ்டியை முடிவு வரை விஸ்தாரமாக செய்தனர். அந்த யாகத்தை செய்து பத்னி என்ற தேவதைகளுக்கும் யாகம் செய்தனர். பத்னி ஸம்யாஜம் என்ற கர்மாவை செய்தனர். தேவர்கள் தீக்ஷினியேஷ்டியை பத்னி ஸம்யாஜம் வரை செய்ததால் இப்பொழுதும் பத்னிஸம்யாஜம் வரை தீக்ஷினியேஷ்டியை அனுஷ்டிக்கின்றனர்.

அந்த தேவர்கள் ப்ராயணீயம் என்ற கர்மாவை செய்தனர். ப்ராயணீயம் என்ற கர்மாவினால் ஜோதிஷ்டோமம் என்ற யக்ஞத்தை மிகவும் நெடுங்கியதாக அனுஷ்டித்தனர். தீக்ஷினியேஷ்டிற்குப் பிறகு தாமதிக்காமல் ப்ராயணீயம் என்ற இஷ்டியை செய்தனர். இந்த ப்ராயணீயம் என்ற யாகத்தில் அங்கங்களை அனுஷ்டிப்பதில்

தேகத்தை காட்டினர். பத்னீஸம்யாஜம் வரை செய்யாமல் ஸம்யுவாகம் வரை செய்தனர். உடன் தேவர்கள் ஆதிஷ்யேஷ்டி என்ற கர்மாவை உடன் அனுஷ்டித்தனர். இதையும் விரிவாக செய்து இடா பக்ஷணம் வரை செய்து முடித்தனர்.

யாகத்தில் ஜக்தம், கீர்னம், வான்தம் என்று மூன்று விதமான ப்ராஹ்மணனை இலக்க வேண்டும். உண்ட பிறகு இலையில் மீதி உள்ளது ஜக்தம் எனப்படும். வயிற்றை அடைந்த உணவு கீர்னம் எனப்படும். வயிற்றில் சென்று வாய் வழியாக வெளிவந்தால் வான்தம் எனப்படும். யாகசாலை நான் அடைந்தால் என் பொருட்டு யஜமானன் பணம் கொடுப்பான் அல்லது யாகத்தில் என்னை ருத்விக்காக சேர்த்துக்கொள்வான் என்று எண்ணி வந்தவனை சேர்த்துக்கொள்வது ஜக்தம் எனப்படும். இவ்விடம் எண்ணி வந்தவனை சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று கருத்து.

கீர்னம், வாந்தம் இவைகளை பற்றி பின்வருமாறு கூறப்பட்டு உள்ளது. ஒரு கிராமத்தில் கிராமத்திற்கு தலைவனாக ஒரு ப்ராஹ்மணன் இருக்கிறான். அவனுக்கு ஒன்றும் தெரியாது. யாகம் செய்பவர் இந்த தலைவரிடமிருந்து பயந்து அவனை யாகத்தில் சேர்த்துக்கொண்டால் கீர்னம் எனப்படும். அதை இவ்விடம் செய்யகூடாது என்பது கருத்து. ஒருவன் திறமை உள்ளவானக இருந்தாலும் பாபியாக இருந்தால் அவனை யாகத்தில் சேர்த்துக்கொள்வது வான்தம் எனப்படும். ஆதலால் இம்மூவரையும் சேர்த்துக்கொள்ளக் கூடாது. தெரியாமல் சேர்த்துக்கொண்டுவிட்டால் ப்ராயச்சித்தமாக வாமதேவ்யம் என்ற ஸாமாவை கானம் செய்ய வேண்டும்.

இவ்விதம் எந்த எந்த யாகங்கள் எது வரை செய்ய வேண்டும். எவரை விலக்க வேண்டும் வாமதேவ்ய ஸாமாவின் பெருமை, இவைகள் கதை வாயிலாக ஐதரேய ப்ராமணம் என்ற நூலில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

---

This beggar is not capable of any miracle. Only Ram Naam is doing miracles!

**- SRI YOGIRAMSURATKUMAR**

# எந்தரோ மஹானுபாவுலு - 68

மஹாப்ரபு, நாமஸங்கீர்த்தனம் செய்யும் சமயத்தில் பக்தர்களுக்கு அனேக அற்புதமான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் சிலவற்றைப் பார்ப்போமா?

ஒரு நாள் மஹாப்ரபு, ஸ்ரீவாஸ்பண்டிதரின் வீட்டில் நாமகீர்த்தனம் முடிவுற்றதும் ஒரு மாங்கொட்டையை முற்றத்தில் நட்டு வைத்தார். பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அதிலிருந்து முளை வெளிவந்தது. சில க்ஷணத்தில் முளை சிறுதுசிறிதாக பெரிதாக கப்பும் கிளையும் கூடின மரமாக வளர்ந்தது. பக்தர்கள் ஆச்சரியத்துடன் அந்த மரத்தைப் பார்த்து பிரமித்து நின்றனர். அதே நேரத்தில் அந்த மரத்தில் பழங்கள் தோன்றி பழுத்துத் தொங்கின. ப்ரபு உடனே அந்தப் பழங்களைப் பறித்தார். பக்தர்களுக்கு ஒவ்வொன்றாக விநியோகம் செய்தார். பெரிய பெரிய சிந்தூர வர்ணத்துடன் கூடிய மாங்கனிகளைப் பார்த்த உடனேயே ஜனங்களுக்கு ஆனந்தம் உண்டாயிற்று. அவற்றிலிருந்து ஒரு திவ்யமான மணம் வீசியது. ப்ரபுவின் ப்ரசாதம் என்று ப்ரேமையுடன் அனைவரும் பெற்றுக் கொண்டனர்.

அந்தக் கனிகளில் கொட்டையுமில்லை தோலுமில்லை. மாதுர்ய ரஸம் நிரம்பி வழிந்தது. ஒரு பழத்தை உண்டதுமே வயிறு நிரம்பி வேறு எதுவும் உண்ண வேண்டும் என்ற எண்ணமே ஒருவருக்கும் எழவில்லை. இப்படியான மாங்கனி மஹோத்ஸவம் ஸ்ரீவாஸ்பண்டிதர் வீட்டில் பன்னிரண்டு மாதங்கள் நடைபெற்றது. ஆனால், இதில் நம்பிக்கை இல்லாத ஜனங்களுக்கு அந்த மாங்கனிகள் கண்ணுக்குப் புலனாகவில்லை; ப்ரஸாதமும் கிடைக்கவில்லை. இன்றும் நவத்வீபத்தில் ''ஆம்ரகாட்'' என்னும் பெயருடன் அந்த இடம் அப்படிப்பட்ட திவ்யமாங்கனிகளை நினைவுபடுத்திக் கொண்டு விளங்குகிறது.

ஒரு நாள் நாமஸங்கீர்த்தனம் நடைபெறும்போது மேகம் சூழ்ந்து கொண்டு இருண்டு கொண்டு வந்தது. இப்படி அஸமயமாக மேகம் சூழ்ந்துகொண்டதைப் பார்த்து பக்தர்கள் நாமஸங்கீர்த்தனத்துக்கு விக்னமாக மழை வந்தால் என்ன செய்வது என்று கவலை

கொண்டனர். இதை அறிந்து கொண்ட ப்ரபு ஒரு ஹுங்காரம் செய்ய மேகங்கள் கலைந்து வானம் நிர்மலமாகி ஆனந்தம் சூழ்ந்து நாமஸங்கீர்த்தனம் மழையின் தடையின்றி பொழிய ஆரம்பித்தது.

இன்னொரு நிகழ்ச்சி! அதைக் கேட்டால் சாதாரண மனிதர்கள் மட்டுமல்ல பரமார்த்திக மார்கத்தில் இருப்பவர்கள் கூட அதிசயித்துப் போவார்கள். பகவத் பக்தியால் இத்தனை மாதுர்யமா? என ஆச்சரியம் ஏற்படும். யாருக்கு பகவத்க்ருபை ஏற்பட்டுள்ளதோ அவர்களுக்கு மாதா, பிதா, மனைவி, புத்ரன், பந்துக்கள் இவர்களிடம் துளிகூட மோஹம் ஏற்படாது. தனது இஷ்ட தேவதையின் ப்ரஸன்னத்திற்காக எதை வேண்டுமானாலும் தியாகம் செய்வார்கள்.

ஒருநாள் ஸ்ரீவாஸ்பண்டிதர் வீட்டு முற்றத்தில் ப்ரேமையுடன் ஸங்கீர்த்தனம் நடக்கின்றது. அன்று என்னவோ தெரியவில்லை, ஒரு அலௌகிகமான ஆனந்தம் இழையோடிக்கொண்டிருந்தது. விதவிதமான வாத்யங்களுடன் அனைவரும் தேஹபாவத்தை மறந்து நாட்டியமாடிக்கொண்டு கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார்கள். இதற்கு நடுவில் ப்ரபு வந்து சேர்ந்துகொண்டு பக்தர்களுடன் ஆட ஆரம்பித்தார். ப்ரபுவின் பின்னால் ஸ்ரீவாஸ்பண்டிதரும் ஆட ஆரம்பித்தார். இதற்கிடையில் ஒரு வேலைக்காரி மெதுவாக ஸ்ரீவாஸ்பண்டிதரை உள்ளே வருமாறு சமிக்ஞை செய்தாள். அதைக் கண்டு ஸ்ரீவாஸ்பண்டிதரும் உள்ளே செல்ல அங்கு ஜுரத்துடன் படுத்துக்கொண்டிருந்த அவரது புத்ரனைக் காண்பித்தனர்.

சசீமாதாவும் மற்ற ஸ்த்ரீகளும் குழந்தையைச் சுற்றி சிச்ருஷை செய்து கொண்டிருந்தனர். குழந்தையின் நிலைமை மோசமாக இருந்தது. ஸ்ரீவாஸ்பண்டிதர் குழந்தையின் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார். நாடியைப் பிடித்துப் பார்த்தார். பிறகு குழந்தையின் முகத்தைப் பார்த்தார். அவருக்கு குழந்தை இறுதி நிலையில் மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறான் என்று புரிந்துவிட்டது. குழந்தையின் நிலையைப் பார்த்துப் பெண்கள் பயந்து அழ ஆரம்பித்தனர். ஸ்ரீவாஸ்ஜி அவர்களுக்கு தைரியமூட்டினார். குழந்தையின் தலைமாட்டில் அமர்ந்து தலையைத் தடவினார்.

சிறிது நேரத்தில் குழந்தையின் மூச்சு நின்றுவிட்டது அவருக்குத் தெரிந்துவிட்டது. ஜீவபக்ஷி சரீரத்தை விட்டுப் பறந்துவிட்டது. குழந்தையின் தாயாரும் மற்ற பெண்களும் விக்கி விக்கி அழுதனர்.

ஒரே புத்ரனின் மரணம் தாயை எத்தனை சோகத்தில் ஆழ்த்தும்? அன்னையின் ஹ்ருதயம் துக்கத்தால் வெடிக்காதா? யாரால் அந்த அழுகையைத் தடுக்க முடியும்? இறந்த புத்ரனைக் கண்டு அன்னை மூர்ச்சித்து விழுந்தாள். இந்த நிலையைக் கண்ட ஸ்ரீவாஸ்பண்டிதர், ''இதோ பாருங்கள்! கவனமாகக் கேளுங்கள்! யாராவது மூச்சு விட்டால் தெரியும் சேதி! ப்ரபு முற்றத்தில் ஆனந்தமாக நடனம் ஆடுவதைப் பார்த்தீர்களா இல்லையா? அவரது ஆனந்தத்திற்கு பங்கம் ஏற்படும் விதத்தில் அழுது ரகளை செய்தீர்களானால் தொலைத்து விடுவேன்! ப்ரபுவின் ஆனந்தத்திற்கு விக்னம் ஏற்பட்டால் எனக்கு நேரும் சோகம், புத்ரனின் மரணத்தால் ஏற்படும் சோகத்தைவிட அதிகம்! யாராவது அழுது அதனால் ப்ரபுவின் நாம ஸங்கீர்த்தனம் நின்றால் நான் கங்கையில் குதித்து ப்ராணனை விட்டு விடுவேன். இதை நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள்!'' என்று மிரட்டினார்.

''ஐயோ! பக்தி தேவி! இப்படி ஒரு கடினமான ஹ்ருதயத்தைக் கூட நீ தருவாயா? பகவானிடம் இப்படி ப்ரேமை இருக்கும் மனதில் இப்படி ஒரு கடினத்வம் கூட இருக்குமா? தன்னுடைய ஒரே பிள்ளை இறந்து கிடக்கையில் அவனது பிணத்தைப் பார்த்து அழக்கூட முடியாத நிலையா ஒரு அன்னைக்கு? இப்படிக் கணவர் ஆணையிட்டு விட்டாரே!'' பதிவ்ரதையான மாலினிதேவி கண்ணீரை உள்ளே முழுங்கிக்கொண்டு மௌனமாக அமர்ந்திருந்தாள்!

பத்னி மௌனமானதும் ஸ்ரீவாஸ்பண்டிதர் சொன்னார், ''இந்தக் குழந்தைக்கு இதைவிட என்ன பெரிய சௌபாக்கியம் இருக்க முடியும்! ஸாக்ஷாத் பகவானான கௌராங்கர் முற்றத்தில் நடனம் ஆடுகிறார். அந்த நேரத்தில் இவனது சரீரத்யாகம் நடந்துள்ளது! இது எத்தனை பெரிய பாக்கியம்!''

மாலினிதேவி மௌனமாக கணவரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஸ்ரீவாஸ்பண்டிதர் மறுபடி ஒன்றும் நடவாதது போல முற்றத்துக்கு வந்து பழைய மாதிரி இரு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு கீர்த்தனமும் நடனமும் செய்ய ஆரம்பித்தார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

மதுரமுரளி தெய்வீக மாத இதழ் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. சந்தாதாரர்கள் மதுரமுரளிக்கான சந்தாவை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் இந்த மாத மதுரமுரளி envelope மீது ஒட்டப்பட்டுள்ள address labelல் இரண்டாம் வரியில் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சந்தா எண்ணைப் பார்ப்போம்.

சந்தா எண் : 2003121234

10 எண்கள் கொண்ட இந்த சந்தா எண்ணில் முதல் 4 எண்கள் சந்தா முடிவடையும் வருடத்தையும் அடுத்த 2 எண்கள் சந்தா முடிவடையும் மாதத்தையும் கடைசீ 4 எண்கள் சந்தா எண்ணையும் குறிக்கும். அதாவது 200312 என்பது டிசம்பர் 2003 உடன் சந்தா முடிவடைந்து உள்ளது என்பதாகும். அவர்கள் உடனே சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். கடைசீ 4 எண்கள் ''1234'' என்பது அவருடைய சந்தா எண். இதே போல் அவரவர்களுக்கான சந்தா எண்ணை குறித்துக்கொள்ளவும்.

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை (for Renewal) "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

சந்தா எண் இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.

சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்ப வேண்டும். 15-ந் தேதிக்கு மேல் வரும் முகவரி மாற்றத்தை அடுத்த மாதத்தில் தான் செயல்படுத்த முடியும். மாதத்தின் 2-ந் தேதிக்குப் பிறகு வரும் புதிய சந்தாதாரர்களுக்கு அடுத்த மாதம் முதல் தான் மதுரமுரளி அனுப்பமுடியும்.

Email-ல் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
contact@madhuramurali.org

# பாலகர்களுக்கு ஒரு கதை - 72

தன்னுடைய தேசத்தை தர்மம் தவறாமல் ஒரு அரசன் அரசாட்சி செய்து வந்தான். அவனுக்கு தன்னுடைய நாட்டு மக்கள் மீதும், அரசாட்சி மீதும் மிகவும் பற்று இருந்தது. இந்தப் பற்றுகளை எல்லாம் துறந்து பகவானை தியானம் செய்து முக்தி பெற வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், அவனால் அந்த பற்றைத் துறக்க முடியவில்லை. 'முக்தி அடைவதற்கு சுலபமான வழி ஏதாவது இருக்கின்றதா?' என்று அவன் தேடிக்கொண்டிருக்கையில், ஒருவர் அரசனிடம் வந்து, 'ஏழு நாட்கள் பரீக்ஷித் மஹாராஜா ஸ்ரீமத் பாகவதம் கேட்டதுபோல் கேட்டால் போதும், கடைசி நாள் அன்று முக்தி கிடைத்துவிடும்' என்றார். இது, அந்த மன்னனுக்கு சுலபமான வழியாகப்பட்டது.

ஒரு நல்ல பண்டிதரை ஏற்பாடு செய்து அவர் மூலம் ஏழு நாட்கள் பாகவதம் கேட்க ஆரம்பித்தான். அந்தப் பண்டிதருக்கோ ஐந்து வயதுடைய தன்னுடைய பேத்தியிடம் ஒரு கண்மூடித்தனமான பாசம். அவர் பாகவதம் படிக்கும்பொழுதே, 'எப்பொழுது ஏழு நாட்கள் ஆகும். வீட்டிற்குப் போய் தன் பேத்தியுடன் கொஞ்சி குலாவி மகிழலாம்' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டே பாகவதம் படித்துக்கொண்டிருந்தார். ராஜாவோ தன்னுடைய படை பலத்தை இன்னும் எப்படிப் பெருக்க வேண்டும், நாட்டில் இன்னும் எத்தனை அணைக்கட்டுக்களை கட்ட வேண்டும், தனக்கு பிறகு பட்டம் கட்டிக்கொள்ள உள்ள தன்னுடைய பையனுக்கு இன்னும் சரியான தகுதிகள் இல்லையே, என்பதைப் பற்றியெல்லாம் மனதில் நினைத்துக் கொண்டே பாகவதம் கேட்டான்.

ஏழு நாட்கள் பூர்த்தியாயிற்று. பாகவதம் படித்தவருக்கு அரசன் பலவிதமான மரியாதைகளையும், உபசாரங்களையும் செய்து அவரை கௌரவித்தான். பிறகு அவரைப் பார்த்து, ''பாகவதம் கேட்ட பரீக்ஷித் ராஜா ஏழாவது நாள் வைகுண்டம் போனான். ஆனால், கதை கேட்ட எனக்கோ முக்தி கிடைக்கவில்லையே! அதற்குக் காரணம் நீங்கள் எனக்கு ஒழுங்காக பாகவதம் சொல்லவில்லை என்று கோபப்பட்டான்''. 'நாளை காலை வரை நேரம் தருகின்றேன். எனக்கு ஏழாவது நாள் மோக்ஷம் கிடைக்காததற்கு தகுந்த காரணத்தைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் உங்களுடைய தலையை

வாங்கிவிடுவேன்' என்றான். ராஜாவிற்கு வைகுண்டம் உண்டோ இல்லையோ நமக்கு நாளை காலை மரணம் நிச்சயம் என்ற கவலையுடனே பண்டிதர் வீடு சென்றார்.

தன்னுடைய தாத்தா வழக்கத்திற்கு மாறாகக் கவலையுடன் இருப்பதைப் பார்த்த பேத்தி அதற்கான காரணத்தைக் கேட்க, அவரும் நடந்ததையெல்லாம் சொன்னார். இதைக் கேட்ட அந்தச் சிறு குழந்தை, ''இதற்குப் போய் கவலைப்படவேண்டாம். நாளை என்னை உங்களுடன் அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள். தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன் கடைசி ஆசை என்ன என்று அரசன் கேட்டால், என் பேத்தியின் நியாயமான ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்று கூறினாள்.

அப்படியே மறுநாளும் நடந்தது. பேத்தியோ, ''மன்னவா! உங்களை ஒரு தூணிலும், என்னுடைய தாத்தாவை மற்றொரு தூணிலும் கயிற்றினால் இறுகக் கட்ட வேண்டும்'' என்றாள். அவளுடைய ஆசை பூர்த்தி செய்யப்பட்டதும், அவள் மன்னனைப் பார்த்து, 'என்னுடைய தாத்தாவினுடைய கட்டை அவிழ்த்துவிடும்' என்றாள். அதற்கு ராஜாவோ, ''நானே கட்டுண்டு இருக்கிறேன்; எப்படி அவரை அவிழ்க்க முடியும்? முட்டாளாக இருக்கிறாயே!'' என்றான். பிறகு அந்த பேத்தியானவள் தாத்தாவைப் பார்த்து மன்னனுடைய கட்டை அவிழ்த்துவிடச் சொல்ல, அவரும் மன்னன் சொன்னதைப் போலவே சொன்னார்.

உடனே அந்தப் பெண் குழந்தை, ராஜாவைப் பார்த்து சிரித்தபடி, ''நீங்கள் நேற்று என்னுடைய தாத்தாவைக் கேட்ட கேள்விக்கு இதுதான் பதில். என்னுடைய தாத்தா பேத்தியான என்னிடம் வைத்துள்ள பாசத்தில் கட்டுண்டுள்ளார். நீங்களோ அரச பதவி என்ற ஆசையில் கட்டுண்டுள்ளீர்கள். அப்படியிருக்க, அவர் பாகவதம் சொல்லி நீங்கள் கேட்டு அதனால் முக்தி உங்களுக்கு எப்படி வரும்? தவறு இரண்டு பேரிடமும் இருக்கின்றது. உலக பற்றுக்களை எல்லாம் துறந்த ஒரு குருநாதர்தான் தன்னுடைய சீடனை அந்த உலகப் பற்றுகளிலிருந்து கரையேற்ற முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்'' என்று கூற, அதைக் கண்டு அந்த சிறு பெண் குழந்தையின் விவேகத்தையும், புத்தி கூர்மையையும் கண்டு அதிசயித்தார்கள். மன்னனும் அந்தக் குழந்தைக்கு பல பரிசுகளைக் கொடுத்து வெகுவாகப் புகழ்ந்தார்.

# மாலே மணிவண்ணா -15

– மஹாவித்துவான், மயிலம் **வே. சிவசுப்பிரமணியன்**

நமக்குக் கிடைத்துள்ள பரிபாடலின் மூன்றாம் பாடல் கடுவன் இளவெயினனார் பாடியது. பெட்டன் நாகனார் இசையமைத்தவர். பண்ணுப்பாலை யாழ் இசையமைப்பு.

பாலைப் பண்ணில் இசையமைத்துத் திருமாலுக்கு ஓர் பசுஞ்சோலையை அமைத்திருக்கிறார் கடுவன் இளவெயினனார். இவரது பெயர்க் குறிப்பிலிருந்து இவரும் பாலை குலத்தைச் சேர்ந்தவர் என்று நினைக்கத் தோன்றுகிறது. 'எயினன்' என்பது பாலை நில மக்களைக் குறிப்பிடுவது என்பது அகப்பொருள் இலக்கணம் கூறும் செய்தி, தத்துவச் சுரங்கமாக இரண்டு பாடல்களைக் கடுவன் இளவெயினனார் தந்திருக்கிறார்.

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனது அளப்பரும் பெருமைகளை அறுதியிட்டுக் கூறுகிறது நான்காம் பாடல். தோத்திரமாகத் தொடங்குகிற பாடல் சாத்திரமாக நிறைவு பெறுகிறபோது நம்மையும் அறியாமல் ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்தை நாம் முழுமையாகப் பெறுகிறோம்.

அகண்டகாரமாக, எல்லாம் தானாக இருக்கின்ற எம்பெருமானின் 'விச்வ' சப்தத்தின் பொருளை விவரிக்கிறது நான்காம் பாடலின் முதற்பகுதி.

விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் நூற்றிஎழுபதாவது திருநாமம் ''மஹாமாய:'' என்பதாகும். உண்மை நிலை அறியாதபடி மயக்குவது மாயை. இருப்பதை இல்லாததாகவும் இல்லாததை இருப்பதாகவும் காட்டுவதும் மாயைதான். இந்த மாயையை ஸித்திசெய்து அதன் மூலம் மயக்கி வசப்படுத்துகிற மாயாவிகளை மயக்கும் மஹாமாயையைக் கொண்டவர் ஆதலின் மாயன் என்பதே அவர் பெயராயிற்று.

தொல்காப்பியம், ''மாயோன் மேய காடுறை உலகம்'' என்றே முதற்பொருளைப் பற்றித் தொடங்குகிறது. திருமாலைச் சொல்வதற்கு ஆயிரம் பெயர்கள் இருக்கின்றன. ஆயினும் அவற்றுள் மாயோன் என்னும் இப்பெயரைத் தொல்காப்பியர் இங்கு சொல்லியதற்குக்

காரணம் உண்டு. உலகம் பற்றிச் சொல்கிற பகுதி இது. உலகை நான்கு வகையாகப் பகுத்தமை பற்றிப் பேசுகிறார். உலகைப் படைக்கவும் நிலை நிறுத்தவும் அழிக்கவும் காரணமாக உள்ள மகாமாயையை உடையவன் எம்பெருமான். அவன் மாயனாய் இருந்து உலகை உண்டாக்கி, நிலைநிறுத்தி அழிக்கிறான்; அதனால் இயைபு பற்றி அந்தப் பெயரைச் சொன்னார்.

'ப்ரதாந புருஷேஸ்வர' என்று ஒரு திருநாமம் உண்டு. ஸ்ரீ விஷ்ணுவின் ஸங்கல்பத்தால் மாயை அவரிடமிருந்து வெளிப்பட்டு இந்த உலகின் மூலதத்துவமாகிய பிரகிருதி மாயை வடிவடைந்து அதனுள் ஆத்மாவை ஜீவனாக்கி உட்புகச் செய்து ஆட்டுவிப்பவர். இயற்கையின் மூல தத்துவம் பிரகிருதியாதலால் அதனை மூலப்பிரகிருதி எனக் கூறுவர் - ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் தத்துவப் பகுதியில் முதலிடம் வகிப்பது மூலப்பிரகிருதியே. இதனை மாயை அல்லது மான் எனவும் கூறுவதுண்டு. மூலப்பிரகிருதி ஆகாசம் முதலிய அனைத்தையும் தன்னுள் தாங்கி நிற்பது என்பதால் அதுவே பிரதானமாகிறது. அந்த பிரகிருதிக்கும், ஜீவனுக்கும் ஈச்வரர் - அவற்றை ஆட்கொண்டவர். மாயையையும் மாயையால் கட்டுண்ட ஜீவர்களையும் தன் விருப்பப்படி ஆட்டுவிப்பர். புருஷனே உலகைச் செயல்படுத்துவதாக உணர்கிறது. ஆனால், பிரகிருதியின் மூலமாக உலகையும் புருஷனையும் கட்டுப்படுவதாக ஆக்குவதும் கட்டிலிருந்து விலக்குவதும் புருஷோத்தமனாகிய அவர் செயலே.

அவரால் செய்யப்படுவதாகிய அனைத்தையும் தன்னால் செய்யப்படுவதாகப் புருஷனை உணரச் செய்வதும் அவர் மாயையே. அதனால், அவர் மாமாயன். விஷ்ணுவாம்சமாக விளங்கும் துர்க்கைக்கும் இந்த 'மாயோள்' என்னும் பெயர் உண்டு.

'மாயோன்' என்பதற்குக் கரியன் என்னும் பொருளும் உண்டு. கருநிறமானவள் என்பதால் துர்க்கையையும் 'மாயோள்' என்கிறோம். 'கருமை நிறம்' தனக்குள் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு தானே வெளித் தோன்றி நிற்கும். தன் கருமையை வெளிக்காட்டுமே அன்றி தன்னுள் அடங்கிய பிற வண்ணங்களைக் காட்டாது. தானே தனிமுதலாகிய பெருமான் தன் மாயையால் உலகைப் படைத்து புருஷனைப் புகுத்தி உலகில் வாழச் செய்கிறான். அவன் செய்கிற

மாயை ஒருவரால் அறியக் கூடுவதில்லை. அவன் வடிவமாகிய பிருகிருதி மாயையே உலகமாய் விரிகிறது.

இத்தனைச் செய்திகளையும் உள்ளடக்கி, பரிபாடலின் மூன்றாம் பாடல் தொடங்கும்பொழுதே எம்பெருமானை,

*''மா அ யோயே மாஅ யோயே*
*மறு பிறப்பு அறுக்கும் மாசில் சேவடி*
*மணி திகழ் உருவின் மாஅ யோயே!*

என்று அற்புதமாக அழைத்து வணங்குகிறது.

வாமனனாகத் தோன்றி இத்துணைச் சிறியவன்தானே என்று எண்ணி அநாயாசமாக மூவடி மண் தரச் சித்தமான மாவலிக்கு நீண்ட பெருவடிவை எடுத்துத் திகைத்துத் திணரச் செய்த மாமாயன் அல்லவா அவன். இந்தப் பாடல் வரிகளும் நெடிலில் தொடங்கி அதுவும் நீண்டு அளபெடையாகிற இலக்கிய நலத்தையும் காணுங்கள். மூன்று நெடில்கள் மா, யோ, யே என்று மூன்று அடியால் அளந்த திருவிக்கிரமானாகிய அந்தப் பெருமானை மூன்று எழுத்துக்களால் நீட்டி அழைத்து அவனது விஸ்வரூபத்தை நம் மனத்தில் பதிய வைக்கிறது நினைக்க நினைக்க இன்பம் தருவதொன்று.

இரண்டு முறை அழைப்பது நம் குழைவையும் பணிவையும் தெரிவிப்பது ஆகும்.

மறுபிறப்பு இல்லாதபடிச் செய்யக்கூடியவன் அவன் என்கிறார் மேலும். அவன் செய்ய வேண்டாம் அவன் திருவுருவமே அதனைச் செய்துவிடும் என்கிற தொனியும் அடுத்த வரியில் வந்து விடுகிறது. அவனது குற்றமற்ற சிவந்த திருவடியும், நீலமணி போல விளங்குகின்ற அப்பெருமானது திருமேனி வண்ணமும் காண்பாரது எண்ணத்தைத் தன்மயமாக்கித் தன்னையே நினையும்படிச் செய்து விடுகின்றன. இடையறாத இந்தத் தியான **பா**வனையால் இந்தப் பிறவியிலேயே வேறு வினை செய்யலாகாத தன்மை உண்டாகிவிடுகிற பொழுது அந்த திருவுருவத் தியானம் மறுபிறப்பை இல்லாதபடிச் செய்தல் சொல்ல வேண்டுவதில்லையே.

(தொடரும்)

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18 (தொடர்ச்சி)

லாலாபாபு, பரத்பூர் மஹாராஜாவுடன் பழகி வந்தார். அந்த சமயத்தில் கிழக்கிந்திய கம்பெனி ராஜஸ்தான் ஸமஸ்தான ராஜாக்களுடன் ஒப்பந்தம் நிறைவேற்ற ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது. பரத்பூர் மஹாராஜாவுக்கு இந்த ஒப்பந்த ஏற்பாட்டில் பெரும்பங்கு இருந்தது. என்ன காரணத்தாலோ பரத்பூர் ராஜா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்துவிட்டார். டெல்லியில் வசித்து வந்த கிழக்கிந்திய கம்பெனியின் பிரதிநிதியான சர்சார்லஸ் மெட்கால்ப் என்பவரிடம் சிலர், ''பரத்பூர் ராஜா ஒப்பந்தத்தில் கையெழுத்திட விருப்பமுடையவர்தான். ஆனால், லாலாபாபுவின் உபதேசத்தின் விளைவால்தான் மனம் மாறிவிட்டார்'' என்று கூறிவிட்டனர். அதைக் கேட்ட மெட்கால்ப் லாலாபாபுவைக் கைது செய்து டெல்லிக்கு அழைத்துவந்து சட்டபூர்வமான விசாரணைக்கு உட்படுத்த ஏற்பாடு செய்தார்.

லாலாபாபுவைக் கைது செய்த விஷயம் வ்ரஜத்தில் காட்டுத்தீ போன்று பரவியது. ஆயிரக்கணக்கான வ்ரஜவாஸிகள் டெல்லியை நோக்கிப் பயணமானார்கள். அங்கு சென்று லாலாபாபுவைக் கைது செய்ததை எதிர்த்தனர். மெட்கால்ப் இதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார். அதே ஸமயத்தில் லாலாபாபுவுக்கு வ்ரஜத்தில் இத்தனை மதிப்புள்ளதா என்று கவலையும் பட்டார். லாலாபாபுவின் மீது நடந்த விசாரணைகளை ஒத்திவைத்துவிட்டு ஒற்றர்களை அனுப்பி லாலாபாபுவின் நடத்தையைப் பற்றியும் பூர்வ வாழ்க்கையைப் பற்றியும் விசாரித்து வருமாறு கட்டளையிட்டார். அவர்களது ரிப்போர்ட்டைப் படித்த மெட்கால்ப்பின் மனம் மாறியது. அவரது அறிவுக்கண் திறந்தது. உடனே லாலாபாபுவை விடுவித்தார். லாலாபாபுவிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு அவருக்கு ''மஹாராஜா'' பட்டத்தை அளிக்க முன் வந்தார். ஆனால், நன்றியுடன் லாலாபாபு அதை ஏற்க மறுத்துவிட்டார். மறுபடி ப்ருந்தாவனத்தை அடைந்தார்.

ப்ருந்தாவனத்தில் ப்ரஹ்மகுண்டத்துக்கு அருகில் மிக அழகிய ராதாக்ருஷ்ண ஆலயம் உருவாகியது. தெய்வ விக்ரஹங்களுக்கு ப்ராணப்ரதிஷ்டையும் செய்விக்கப்பட்டது. கிருஷ்ணனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணசந்த்ரமா என்று நாமகரணம் செய்தார்கள். அங்கு நிறைய விடுதிகளை ஏற்படுத்தி நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு

தினமும் உணவளிக்க ஏற்பாடு நடந்தது. லாலாபாபு மட்டும் வ்ரஜவாஸிகளிடம் பிச்சை எடுத்துத்தான் உண்பார்.

ஒரு ஜனவரி மாத குளிர்ந்த நாளில், லாலாபாபு, அழகிய க்ருஷ்ணசந்த்ரமாவை கண்குளிர ரசித்துக்கொண்டிருக்கும்போது அவருடைய மனதில் திடீரென்று ஒரு எண்ணம் பளிச்சிட்டது. உடனே அவர் பூஜாரியிடம் க்ருஷ்ணனின் தலையில் சிறு வெண்ணை உருண்டையை வைக்குமாறு வேண்டிக்கொண்டார். புஜாரி லாலாபாபுவை ஆச்சரியத்துடன் பார்த்தார். லாலாபாபு, ''ஆமாம்! ஆமாம்! நான் சொன்னது போல செய்யுங்கள்! ப்ராணப்ரதிஷ்டைக்குப் பிறகு விக்ரஹத்திற்கு உண்மையாக ப்ராணன் ஏற்பட்டுள்ளதா? என்று சோதித்து பார்க்க விரும்புகிறேன். அப்படி உண்மையாக ப்ராணன் இருந்தால் தலையில் வைத்த வெண்ணை உருகிவிடும் இல்லையா! அதைக் காண விரும்புகிறேன்!'' என்று சொன்னார்.

புஜாரி அதைக் கேட்டுக் கீழ்ப்படிந்து, க்ருஷ்ணசந்த்ரமாவின் சிரசில் சிறு வெண்ணை உருண்டையை வைத்தார். சிறிது நேரத்தில் வெண்ணை உருகி கிருஷ்ணனின் அழகிய கன்னத்தில் உருண்டோடியது. புஜாரியும் கூடியிருந்த பக்தர்களும் ஆனந்தத்தால் கண்ணீர் பெருக, ''ஸ்ரீ க்ருஷ்ணசந்த்ரமாவுக்கு ஜெய், ஸ்ரீ க்ருஷ்ண சந்த்ரமாவுக்கு ஜெய்!'' என கூவினார்கள். லாலாபாபுவும் **பா**வமேலீட்டால் தரையில் மூர்ச்சையாகி விழுந்தார்.

மறுபடி ஒரு சமயம், லாலாபாபு, க்ருஷ்ணனை பரிசோதிக்க விரும்பினார். கண்ணனின் சிலையில் உஷ்ணம் உள்ளது என்றால் மூக்கிலிருந்து சுவாசம் வரவேண்டுமே! அதையும் பரீக்ஷை செய்து பார்த்துவிடுவோம் என நினைத்தார். புஜாரியிடம் ஒரு பஞ்சுத் துண்டைக் கொடுத்து அதை க்ருஷ்ணனின் சிலையின் மூக்கின் அருகில் வைத்துக் கொள்ளச் சொன்னார். புஜாரியும் சிரித்துக்கொண்டே பஞ்சை விக்ரஹத்தின் மூக்கில் வைக்க அது சுவாசத்தினால் துடிதுடிக்க ஆரம்பித்தது. இதைப் பார்த்த லாலாபாபு **பா**வ சமாதியில் ஆழ்ந்து தன்னை கட்டுப்படுத்த முடியாமல் தரையில் விழுந்து புரண்டார். ''ஆஹா! ப்ராண ப்ரதிஷ்டை வெற்றி அடைந்து விட்டது'' என்று கோஷமிட்டார்.

ப்ராணப்ரதிஷ்டை மட்டும் தெய்வத்துக்குள் உயிரை அளித்து விடாது. பக்தர்களின் **பா**வமும் மிக முக்கியம். பக்தனின் **பா**வத்திற்கேற்ப தெய்வமும் தோன்றி, நடந்து, மறைந்துகொள்ளும்.

லாலாபாபுவின் **பா**வமும் அப்படி உயர்ந்ததாக இருந்ததால் தெய்வம் இப்படிப்பட்ட பரிசோதனைக்கு தன்னை உட்படுத்தி பக்தனின் ஹ்ருதயத்தில் உள்ள ஆசையைப் பூர்த்தி செய்து வைக்கும்.

ஒருநாள் க்ருஷ்ணசந்த்ரமா லாலாபாபுவின் கனவில் தோன்றி, ''உன்னுடைய சேவையினால் நான் மிகவும் சந்தோஷமடைந்தேன். இன்னும் ஒன்று உன்னிடம் பிச்சை கேட்கட்டுமா?'' என்றான். லாலாபாபு, ''ப்ரபோ! கேளுங்கள். இந்தப் பிச்சைக்காரன் உங்களது ஆசையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். நான் என்ன செய்யட்டும்'' என்றார்.

பகவான் பேசலுற்றார், ''லாலாபாபு! நான் பிறவியிலிருந்தே பிச்சைக்காரன்தான் என்று உனக்குத் தெரியும். நான் என்னுடைய பக்தர்களிடம் பிச்சை கேட்டு அலைகிறேன். என்னிடம் இல்லாதது எதுவும் இல்லை என்றாலும், நான் வசிக்காத இடம் எதுவும் இல்லை என்றாலும் நான் என் பக்தர்கள் கட்டிய கோவிலில் வாழ்ந்து கொண்டு அவர்கள் தரும் உணவை உண்டு மகிழ்கிறேன். நீ எனக்காக இன்னும் ஒரு கோவில் கட்டினால் அதில் நான் ஆனந்தமாக வசிப்பேன். செய்வாயா?'' என்றார். ''இன்னும் ஒரு கோவிலா? ப்ரபு நான் இப்போது ஓட்டாண்டி! ஜமீனிலிருந்து கிடைத்த பணத்தை எல்லாம் ஏற்கனவே செலவழித்து விட்டேன். நான் எப்படி கோவில் கட்டுவேன்'' என்று லாலாபாபு கூறினார்.

''நீ அனைத்தையும் துறந்துவிட்டாய். உன்னுடையது என்று சொல்லிக்கொள்ள உன்னிடம் எதுவும் இல்லை என்று எல்லாம் எனக்குத் தெரியாதா? நான் உன்னைக் கட்டச் சொன்ன கோவில் அனைத்தையும் துறந்தவர்கள் கட்டும் கோவில்தான். ஒருவன் ஸகலத்தையும் துறந்த பிறகு தன் இதயத்தில் ஒரு கோவிலைக் கட்ட வேண்டும். வைகுண்டத்தில் வசிப்பதைவிட அந்த இதயக் கோயிலில் வசிக்க நான் மிகவும் ப்ரியப்படுவேன். நீயும் வெளியில் நிறையக் கோவில் கட்டிவிட்டாய். உனக்குள் ஒரு கோவில் கட்டி அதில் என்னை நிரந்தரமாக தங்க வை. உன் வீட்டு வாயிலில் நின்று கொண்டு இன்று இந்த பிக்ஷையைக் கேட்கிறேன்'' என்று பகவான் சொன்னார். லாலாபாபு, ''ப்ரபு! உங்களுக்காக இதயத்தில் கோவில் கட்ட நான் என்ன செய்ய வேண்டும்'' எனக் கேட்டார்.

கண்ணன், ''நீ முதலில் வ்ரஜபூமியைச் சுற்றிவா. என்னுடைய லீலா ஸ்தலங்களைக் கண்டு வா. பிறகு கோவர்த்தனத்தில் அமர்ந்து

கொண்டு பஜனை செய். பஜனையின் முன்னேற முன்னேற எனக்கு எப்படிக் கோவில் கட்ட வேண்டும் என்று உனக்கே தன்னால் புரிய ஆரம்பிக்கும்'' என்றான். விழித்தெழுந்த லாலாபாபு, வ்ரஜமண்டல ப்ரதக்ஷிணத்தை ஆரம்பித்தார். க்ருஷ்ணலீலா ஸம்பந்தப்பட்ட அனைத்து ஸ்தலங்களையும் ஒன்றுவிடாமல் தரிசித்துவிட்டு கோவர்த்தனத்தில் ஒரு குகையில் வசிக்கலானார். அங்கு நிரந்தரமாக பஜனை செய்து வந்தார். தினமும் காலையில் கோவர்த்தனகிரிராஜனை வலம் வருவார். பரிக்ரமாவிற்குப் பிறகு நாள் முழுவதும் பஜனை செய்வார். இரவில்தான் பிக்ஷைக்குச் சென்று உண்பார்.

ஒருநாள் பரிக்ரமாவின்பொழுது கோவர்த்தன கிரிராஜன் கோவில் புஜாரி, ''பாபா! நீங்கள் மதுகரிக்கு இனி செல்ல வேண்டாம். நானே உங்கள் குகைக்கு வந்து கிரிராஜனின் ப்ரஸாதத்தைத் தருகிறேன்'' என்று சொன்னார். அன்று மாலையே மழை ஆரம்பித்து, தொடர்ந்து பெய்யத் தொடங்கியது. பெரும் மழையில் புஜாரியால் வெளியே கிளம்பவே முடியவில்லை. லாலாபாபுவுக்கு ப்ரஸாதம் தர முடியவில்லையே என்று அளவில்லாத கவலை அடைந்தார். பாபா பசியுடன் இருப்பாரே என்று வருத்தமடைந்தார். மழை கொஞ்சம் நின்றதும் கோவிலுக்குள் லாலாபாபுவுக்கென்று தட்டில் எடுத்து வைத்த ப்ரஸாதத்தை எடுத்து வர உள்ளே சென்றார். அங்கு சென்றதும் அந்த தாம்பாளத்தைக் காணாமல் ஆச்சரியமும் தவிப்பும் அடைந்தார். தட்டு எப்படி காணாமல் போயிற்று என்று சர்ச்சை செய்ய நேரமில்லை என்று தோன்றியதால் உடனே வேறு தட்டில் ப்ரஸாதத்தை எடுத்துக்கொண்டு குகையை நோக்கிச் சென்றார்.

(தொடரும்)

---

பகவான் ராஸம் செய்யும்பொழுது அதில் கலந்துகொண்டவர்களுக்கு அப்பொழுதுதான் ஆனந்தம். அதுபோல், அந்த ராஸோத்ஸவத்தை பார்த்தவர்களுக்கு அப்பொழுது மட்டும்தான் ஆனந்தம். ஆனால், ராஸோத்ஸவத்தை ஒவ்வொருமுறை பாராயணம் செய்யும்பொழுதும், கேட்கும்பொழுதும் நமக்கு ஆனந்தம் ஏற்படுகின்றது. ஆகவே, அவர்களை விட நாம்தான் பாக்யசாலிகள்.

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ அண்ணா**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 99

நம்முடைய மதத்திற்கு இந்துமதம் என்ற பெயர் உண்மையானது இல்லை. நம்முடைய மதம் ஸனாதனமான மதம். ஸனாதனம் என்றால் பழமையானது என்று அர்த்தம். பல மதங்கள் இருந்தால், அதிலிருந்து ஒரு மதத்தை வித்யாசப்படுத்தி காண்பிப்பதற்கு ஒரு பெயர் தேவை. ஒரு பள்ளியில், ஒரு வகுப்பில் கோபாலன் என்ற பெயர் கொண்ட நான்கு மாணவர்கள் இருந்தால், ஒரு கோபாலனையும், மற்றொரு கோபாலனையும் வித்தியாசப்படுத்தி காண்பிக்க, இனிஷியலைக் கொண்டோ அல்லது ரூபத்தில் உள்ள வித்தியாசத்தையோ சொல்வது போல், பல மதங்கள் இருக்கும்பொழுது, ஒரு மதத்தை மற்ற மதங்களிலிருந்து வித்யாசப்படுத்திக் காண்பிக்க வித்தியாசம் தேவை.

ஒரு காலத்தில், இந்த ஸனாதனமான மதமே உலகம் முழுவதும் பரவி இருந்ததால், இதற்கென்று ஒரு தனிப்பெயர் இருக்கவில்லை. மீதி மதங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றின என்று சொல்கிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு மதம் தோன்றியது என்றால், அக்காலத்திற்கு முன் அம்மதம் இல்லை என்று ஆகிவிடுகிறது. மேலும், ஒரு மதத்தை தோற்றுவித்தவர் இவர்தான் என்றும் சொல்கிறோம். ஆனால், நம் மதம் பழமையானது என்பதால், இது தோன்றிய காலம் என்று ஒன்று இல்லை.

‘இந்துமதம்’ என்று சொல்கிறோமே என்றால், ‘‘இந்து’’ என்ற பெயர் நமக்கு வெளிநாட்டவர்களால் கொடுக்கப்பட்டது. ஸிந்து நதிக்கரை வழியாக நாம் இந்நாட்டிற்குள் வந்ததாக அவர்கள் கருதினர். சிந்து நதிக்கரையை ஒட்டி நமது நாகரிகம் வளர்ந்தது என்று அவர்கள் நினைத்ததால், ‘ஸிந்து’ என்ற பெயர் நமக்கு வந்தது. ‘ஸிந்து’ என்பதே மருவி ‘ஹிந்து’ ஆகிவிட்டது. ஸமஸ்கிருதத்தில் ‘ஸ’, ‘ஹ’ எனும் சப்தங்கள் மருவி வரும். நம் மதத்திற்கு ஒரு பெயர் சொல்ல வேண்டுமென்றால், ‘வைதீக மதம்’ என்று சொல்லலாம். ‘வைதீக மதம்’ என்றால், வேதத்தை ஆதாரமாகக் கொண்ட மதம்

என்று அர்த்தம். வேதத்திற்கும் உற்பத்தி என்பது இல்லை. ஆத்ம தத்துவங்களைச் சொல்லும்பொழுது 'அனாதி' என்கிறோம். அதுபோல் வேத்தையும் 'அனாதி' என்றுதான் பலரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். அனாதி என்றால் இதை 'தோற்றுவித்த ஒரு காலம் இல்லை என்று மட்டும் அர்த்தமில்லை. இதற்கு உற்பத்தியே இல்லை' என்றும் அர்த்தம். ஒரு காலகட்டத்தில் மறைந்து ஒரு காலகட்டத்தில் வெளிப்படுவது வேதம். அதனால், வேதத்திற்கு ஒருக்காலும் அழிவு என்பதே இல்லை. வேதத்தை ஆதாரமாகக் கொண்டதே வைதீகமதம்.

நம் மதத்தை தோற்றுவித்தவர்கள் என்று யாரையாவது குறிப்பிட வேண்டுமென்றால், மகரிஷிகளைச் சொல்லலாம். மகரிஷிகளே இந்த மதத்திற்கு ஆதாரமானவர்கள். அதிலும் குறிப்பாக ஒருவரையே சொல்ல வேண்டுமென்றால், வேதவியாசரை சொல்லலாம். வேதமில்லை என்றால் நம் மதம் இல்லை. வேதவியாசரே இம்மதத்திற்கு காரணகர்த்தா என்றாலும் தவறில்லை. வேதத்தை ஆதாரமாகக் கொண்ட மதமாக இருப்பதால்தான், நம் மதத்தில், எந்த இதிஹாஸ புராணங்களை எடுத்துப் படித்து பார்த்தாலும், அதில் வேதத்தில் சொன்ன விஷயங்கள் இதில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று வரும்.

உதாரணமாக, இராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் போன்றவற்றின் த்யான ஸ்லோகங்களில் வேதத்தில் சொல்லப்பட்ட ரஹஸ்யங்கள் இதில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று வருகிறது. இதிஹாஸ, புராண, சாஸ்திர கிரந்தங்களில் எதுவாக இருந்தாலும், அது வேதத்திற்கு விரோதமாய் சொல்லுமானால், அதை மஹாத்மாக்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். அதை அலக்ஷ்யம் செய்து விடுவர். வேதத்தில் சொன்ன விஷயங்கள் ஒரு கிரந்தத்தில் உள்ளது என்று சொல்லப்படுவது, அந்த கிரந்தத்திற்கு கௌரவம்.

ஒருவன் ஸகல வேதத்தையும் அத்யயனம் செய்து, அதன் ஸாரத்தைத் தெரிந்துகொள்வது ஸாத்யம் இல்லை. அத்யயனம் செய்தாலும், அதில் என்ன விஷயங்கள் சொல்லி உள்ளன என்று எப்படித் தெரியும்? ஆதலால், மஹாத்மாக்கள் வேதத்தில் உள்ள விஷயங்களையே சாஸ்திரங்களாக கொடுத்திருக்கின்றனர். வேதத்தில் சொன்ன விஷயங்கள் சாஸ்திரத்தில் உள்ளது என்பதற்கு ஆதாரமாக மகாகவி காளிதாஸனின் காவியமான ரகுவம்சத்தைக் கொண்டு சொல்லலாம்.

காளிதாஸன் ஒரு வரகவி. அவன் வாயில் வருவது சத்யமாகிவிடும். (மாற்றிச் சொன்னால் எது சத்யமோ அதுவே அவன் வாயில் வரும்) போஜ மஹாராஜா சபையில் இவன் இருக்கும்பொழுது, இவனுடைய கவிதைத் திறமையைப் பார்த்து, போஜராஜனுக்கு ஒரு விநோத ஆசை வந்தது. அது என்னவென்றால், தான் அந்திம கதியை அடைந்து விட்டால், காளிதாஸன் தன்மீது எப்படி ஸ்லோகம் செய்வான் என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான். தான் உயிருடன் இருக்கும் பொழுதே, தன்மீது அப்படி ஒரு ஸ்லோகத்தை காளிதாஸனை பாடச் சொல்கிறான். காளிதாஸன் அதற்கு மறுத்துவிடவே, போஜனுக்கு கோபம் வந்து விடுகிறது. போஜன் காளிதாஸனிடம், ''நான் ராஜா. என் நாட்டில் இருக்கும் நீ, எப்பொழுது எனது உத்திரவை கேட்கவில்லையோ, அப்பொழுது நீ எனது நாட்டில் இருக்கக்கூடாது'' என்று கூறி, நாடு கடத்தி விட்டான்.

காளிதாஸனும் அதுபோல் வெளியே நடந்து வந்து, ஒரு விடுதியில் (வழிப்போக்கர்கள் தங்கும் சத்திரத்தில்) இளைப்பாறிக் கொண்டு இருந்தான். போஜனுக்கு காளிதாஸனை வெளியில் செல்ல உத்திரவிட்டாலும், உள்ளே வருத்தம். காளிதாஸனை மாறுவேடத்தில் தேடி வந்தான் போஜராஜன். அப்படியே காளிதாஸனைக் கண்டுபிடித்து, மாறுவேடத்தில் அவனருகில் அமர்ந்தான். அமர்ந்தவன் 'ஓ' என்று அழுதான். அதைக் கண்ட காளிதாஸன், அவனிடம் ஏன் அழுகிறாய் எனக் கேட்க, 'போஜ மஹாராஜா அந்திமகதியை அடைந்து விட்டார்' என்று மாறுவேடத்திலிருக்கும் போஜன் அழுதுகொண்டே சொன்னான். உடன் காளிதாஸன், ''இப்பேர்ப்பட்ட மஹத்தான ஒரு ராஜா போயிட்டாரே'' என்று ஒரு ஸ்லோகம் பண்ணுகிறான். அவன் ஸ்லோகத்தைப் பாடியவுடன், மாறுவேடத்திலிருக்கும் போஜ ராஜா இறந்து போய்விட்டான். காளிதாஸன் பாடியது சத்தியமாகிவிட்டது. பின்னர், காளிதாஸனின் சரித்திரத்தில், மறுபடி அவன் ஒரு ஸ்லோகம் செய்து போஜராஜனை எழுப்புகிறான் என்று வருகிறது.

ஆக, காளிதாஸன் வாக்கில் வருவது சத்தியமே. அவன் எழுதிய ரகுவம்சத்தில், திலீபன் என்னும் மஹாராஜா தனக்கு புத்திர பாக்யம் (குழந்தை) இல்லாததால், தனது குருவான வசிஷ்டரிடம் சென்று. தனக்கு புத்திரபாக்கியம் வேண்டுமென்று கேட்கிறான்.

அப்பொழுது வசிஷ்டர், காமதேனுவின் குட்டியான நந்தினியை (பசு) கொடுத்து, இந்த கன்றுக் குட்டியை ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தால், புத்திர ஸந்தானம் ஏற்படும் என்று சொல்கிறார். இந்த திலீபன் எப்படி நந்தினி எனும் அந்த கன்றுக்குட்டியை பார்த்துக் கொண்டான் என்றால், கன்றுக்குட்டி உட்கார்ந்தால் இவனும் உட்கார்ந்தான். அது தூங்கினால், இவன் அருகில் நின்றான். திலீபனும், ஸுதீஷ்ணையும் (திலீபன் மனைவி) எப்படி கன்றுக்குட்டியைப் பார்த்துக்கொண்டார்கள் என்பதைச் சொல்ல வந்த காளிதாஸன், ***''மார்கம் மனுஷ்யேஸ்வர தர்மபத்நீ ஸ்ருதேரிவார்த்தம் ஸ்ம்ருதிரன்வகச்சத்''*** என்கிறான். எப்படி சாஸ்திரங்கள் வேதத்தை ஒட்டிச் செல்கின்றனவோ, அப்படி திலீபன் கன்றுக்குட்டியை ஒட்டி போனான் என்கிறான்.

உவமான வஸ்துவைக் காட்டிலும் உபமேய வஸ்து சிரேஷ்டமாக இருக்கும். 'தாமரை போன்ற முகம்' என்றால், முகம் அழகாக உள்ளதோ, இல்லையோ தாமரை அழகாக இருக்கிறது. ஒரு அழகான வஸ்துவைத்தான் உலக உவமானங்களுக்கு எடுத்துக் கொள்கிறோம். அதுபோல் இங்கு, 'திலீபனும், ஸுதீஷ்ணையும் வேண்டுமானால் நந்தினி முன், பின் மாறிச் சென்றிருக்கலாம். ஆனால் சாஸ்திரம், வேதத்தை ஒட்டிச் செல்கிறது என்பதில் எந்த அபிப்ராய பேதமுமிருக்க முடியாது'' என்று சொல்கிறான் காளிதாஸன்.

இந்த சாஸ்திரங்களின் ஸாரம் ஆத்மசாக்ஷாத்காரத்தை அடைவதே. வேறு எதுவுமில்லை. அக்ஷரமணமாலையில் ரமணரும், 'வேதாந்தத்தே வேறற விளங்கும் வேதப்பொருளருள்'' என்கிறார். வேதத்தின் அந்தம் (வேதாந்தம்) என்றால், வேதத்தின் முடிவு (சாரம்) என்று அர்த்தம். வேதத்தின் முடிவும் என்ன என்றால் ஜீவன் முக்தி அடைவதே வாழ்க்கையின் லக்ஷ்யம்.

(தொடரும்)

---

There is a power that governs everything, controls everything. So whatever happens is alright.

**- SRI YOGIRAMSURATKUMAR**

## சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

**அக்டோபர் 30-ந் தேதி அன்று மாலை 6 மணியளவில்**

Sri Swaminathan, Kalpana Castle,
(O) 17/4, (N) 15/4, Lakshmi Colony,
North Crescent Road, T. Nagar, Chennai - 600 017
அவர்களது க்ருஹத்தில் கேந்த்ரா கிளை துவங்கப்பட்டது.

இந்தக் கிளையில் ஒவ்வொரு
சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில்
மாலை 4 மணி முதல் மாலை 5 மணி வரை

''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ॥''

அகண்டகீர்த்தனம் நடைபெறும். இதில் அனைவரும் பங்கு கொள்ளலாம்.

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி,** 11-11-2003 அன்று திரு. A.S. சத்தியமூர்த்தி அவர்கள் வீட்டில் ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் ஆரம்பித்து வைத்தார்கள். இங்கு ப்ரதி ஞாயிறுதோறும் மாலை 4 மணிக்கு நாமஸங்கீர்த்தனம் நடைபெறும். அனைவரும் இதில் கலந்துகொள்ளலாம்.

விலாசம்

**திரு. A.S. சத்தியமூர்த்தி,** *புதிய எண். 9 (ப. எண்.4),*
*கலெக்டர் சிவகுமார் தெரு, கே.கே. புதூர்,*
*கோயம்புத்தூர் - 641 038 ✆ 0422-2447107*

இங்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் வெளியீடுகளான புத்தகங்கள்,
கேசட்டுகள் மற்றும் CDகள் கிடைக்கும்.

# செய்திகள்

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தி மஹோத்ஸவம்

### அக்டோபர் 25-ந் தேதி

**சென்னை ப்ரேமிகபவனத்தில்** ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தி மஹோத்ஸவத்தை ஒட்டி, மதியம் 2 மணி முதல் 5 மணி வரை ''வாக்யார்த்த வித்வத் ஸதஸ்'' நடைபெற்றது. மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை ஸ்ரீமதி கமலா மூர்த்தி அவர்களின் 'சுபத்ரா கல்யாணம்'' ஹரிகதை நடைபெற்றது.

### அக்டோபர் 26-ந் தேதி — ஐப்பசி ஸ்வாதீ

**மதுரபுரி ஆஸ்ரமத்தில்** மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் விசேஷ திருமஞ்சனம், பூஜை நடைபெற்றன. காலை 8 மணி முதல் 12 மணி வரை கணபதி ஹோமம், ஆவஹந்தி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், சுதர்ஸன ஹோமம் முதலியவை நடைபெற்றன. பல்வேறு திருக்கோயில்களிலிருந்து ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு ப்ரஸாதம் வழங்கப்பட்டது.

மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை ''ஸ்ரீதேவி ந்ருத்யாலயா'' வித்யார்த்திகளின் ''பரதநாட்டியம்'' நடைபெற்றது.

மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை செல்வி சம்பதா ஹிராய் அவர்களின் மஹாராஷ்டிர அபங்க பஜனை நடைபெற்றது. இரவு திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது.

**சென்னை, ஆலப்பாக்கம் மதுரமுரளிபவனத்தில்** ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பாதுகைக்கு திருமஞ்சனம், பூஜை, அர்ச்சனை நடைபெற்றன. ஆயுஷ்ய ஹோமம், ஆவஹந்தி ஹோமம் முதலியன நடைபெற்றன.

**பெங்களூர், மல்லேஸ்வரம்** ஸ்ரீ சங்கரன் அவர்கள் க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி பாதுகைக்கு திருமஞ்சனமும் அர்ச்சனையும் நடைபெற்றது. ஆயுஷ்ய, ஆவஹந்தி ஹோமங்கள் நடைபெற்றன.

**சேலம் ஸ்ரீ குருவாயூரப்பன் திருக்கோயிலில்** நாமகீர்த்தனத்துடன் ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது.

**தஞ்சாவூர்** ஸ்டேட் பாங்க் காலனியில் உள்ள மதுரமுரளி பவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஜயந்தி கொண்டாடப்பட்டது.

**ஆஸ்திரேலியா சிட்னியிலும், இந்தோனீஷியா ஜகார்த்தாவிலும், அமெரிக்கா** முதலான வெளிநாடுகளிலும் ஸ்ரீ ஸ்வாமிஜியின் பக்தர்களால் ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது.

**அக்டோபர் 28-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை**

திருவனந்தபுரம், ஸ்வாமி அபேதானந்த ஆஸ்ரமத்தில், ''நாம ப்ரபாவம்'' பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம் நடைபெற்றது.

**நவம்பர் 1-ந் தேதி முதல் 7-ந் தேதி வரை**

சென்னை, அண்ணாநகர், ஸ்ரீ ஐயப்பன் திருக்கோயிலில் ஸ்ரீ சங்கர ஹாலில், ''பக்த சரித்ரங்கள்'' பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

**நவம்பர் 5-ந் தேதி — ப்ருந்தாவன த்வாதஸி**

சென்னை பிரேமிகபவனத்தில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை துளஸீ கல்யாணம் நடைபெற்றது.

**நவம்பர் 10-ந் தேதி முதல் 13-ந் தேதி வரை**

பொள்ளாச்சி, வெங்கடேசா காலனி, ராஜு மஹாலில் பக்தசரித்ரங்கள் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

**நவம்பர் 15-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை —**
**ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹ ஸதக்ரது மஹோத்ஸவம்**

மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் கோடி அர்ச்சனை பூர்த்தியை முன்னிட்டு, ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹ ஸதக்ரது வெகு விமர்சையாக நடைபெற்றது. பூர்த்தி தினத்தன்று ஸ்ரீ ஸ்வாமிஜி கலச தீர்த்தத்தினால் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு ஸஹஸ்ரதாரையில் திருமஞ்சனம் செய்தார்கள். அன்று மாலை கேரள, பஞ்சவாத்யங்கள் முழங்க மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் கருடவாஹனத்தில் புறப்பாடு கண்டருளினார்.

### நவம்பர் 23-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை —
### ஸம்ப்ரதாய ஸங்கீர்த்தன ஸப்தாஹம்

சென்னை, மேற்கு மாம்பலம், அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில் ஸ்ரீ ராம் ஸமாஜத்தின் சார்பில், ஸம்ப்ரதாய ஸங்கீர்த்தன ஸப்தாஹம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

தினமும் காலை 6 மணிக்கு மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனுக்கு ப்ரபோதனமும் ஸ்ரீமத் பாகவத பாராயணமும் நடைபெற்றது. காலை 8 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பூஜை நடைபெற்றது. பகல் 12 மணிக்கு பூஜைக்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி தீர்த்தப்ரஸாதம் வழங்கினார்கள்.

இரவு 7 மணி முதல் இரவு 9 மணிவரை ஸ்ரீ ஸ்வாமிஜி பக்த சரித்ரங்களைப் பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

பாரத தேசத்தின் பல பாகங்களில் இருந்து பாகவதோத்தமர்கள் இதில் கலந்துகொண்டு காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நாமகீர்த்தனம் செய்தார்கள்.

இரவு உபன்யாஸத்திற்குப் பிறகு திவ்யநாமகீர்த்தனமும் டோலோத்ஸவமும் நடைபெற்றன.

பூர்த்தி தினத்தன்று காலையில் சீதாகல்யாணம் நடைபெற்றது. பெரும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். இரவில் வஸந்த கேளிக்கை பவ்வளிம்பு நடைபெற்றது.

---

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# பக்தர்களின் கவனத்திற்கு!

நமது **மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திற்குள்** தியானகூடமோ, தெய்வ பிரதிஷ்டையோ, அதிஷ்டானமோ எதுவும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும் காலங்களில், **மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு பூஜையும் ஸத்ஸங்கமும்** நடைபெறும். ஆஸ்ரம வளாகத்திற்குள் **யஜுர், ஸாம வேதபாடசாலை** நடந்து வருகின்றது. சுமார் அறுபது வித்யார்த்திகள் வேதம் பயின்று வருகிறார்கள். ஆஸ்ரமத்தில், கைங்கர்யம் செய்து வருபவர்களும் அவர்களுடன் தங்கியுள்ளார்கள். வேதம் பயிலும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், **ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும்பொழுது மட்டுமே பக்தர்கள் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும்** தரிசனத்திற்கு ஆஸ்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆஸ்ரம வளாகத்திற்கு பக்கத்திலேயே ஸ்ரீ ஸ்வாமிஜியால் **ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம்** நிர்மாணிக்கப்பட்டு நித்ய ஆராதனைகள் நடந்து வருகின்றது. தினமும், **காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும்** கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் இந்த நேரத்திற்குள் எப்பொழுதும் பெருமாளை ஸேவிக்கலாம்.

சென்னை K.K. நகரில் (ஜாபர்கான்பேட்டை) பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருக்கும் சமயத்தில் அவரை **காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையிலும்** தரிசனம் செய்யலாம். ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யும்பொழுது அவரிடமிருந்து **பகவந்நாம உபதேசம்** பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் **மதுரமுரளி** இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் **முன் அனுமதி** பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும். அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

**கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam,
New No.2, (Old No.24),
Netaji Nagar, Jafferkhanpet,
Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

---

*டிசம்பர் 16-ந் தேதி முதல் ஜனவரி 14-ந் தேதி வரை ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் தினமும் காலை 4.30 மணிக்கு தனுர்மாத பூஜை நடைபெறும்.*

| | | |
|---|---|---|
| *தினசரி கட்டளை* | : | *ரூ.150/-* |
| *கோயில் தரிசன நேரம்* | : | *காலை 4.30 முதல் 9.30 வரை* |
| | | *மாலை 5.00 முதல் 8.00 வரை* |

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் ப்ரதிஷ்டாதினம்**

| | | |
|---|---|---|
| **தேதி** | : | 26.1.2004 – **வஸந்தபஞ்சமி** |
| காலை 8.00 | : | விசேஷ திருமஞ்சனம் |
| மாலை 6.00 | : | ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸம் |
| இரவு 9.00 | : | திவ்யநாம ஸங்கீர்த்தனம் |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

| | |
|---|---|
| 10.12.2003<br>மாலை 4 மணி | ராம்நகர் பஜனை கோஷ்டி மண்டபம்<br>திறப்பு விழா,<br>இடம் : ''ராம்நகர்'', கோயமுத்தூர் |
| 13.12.2003<br>&<br>14.12.2003 | ராதா கல்யாணம்<br>இடம் : பெரம்பூர், நீடாமங்கலம் |
| 16.12.2003 | தனுர்மாத பூஜை ஆரம்பம் |
| 16.12.2003 முதல்<br>25.12.2003 வரை | அத்யயன உத்ஸவம் |
| 26.12.2003<br>மாலை 6.30 முதல்<br>இரவு 8.30 வரை | உபன்யாசம்<br>இடம் : மணதட்டை அக்ரஹாரம், குளித்தலை,<br>திருச்சி |
| 28.12.2003 காலை<br>மாலை 6.00 | ராதா கல்யாணம்<br>உபன்யாஸம்<br>இடம் : ஸ்ரீ தாஸப்பா கல்யாண மஹால், ஒசூர் |
| 31.12.2003<br>இரவு 7.00 முதல்<br>இரவு 9.00 வரை | உபன்யாஸம்<br>இடம் : ஸ்ரீ குருவாயூரப்பன் திருக்கோயில்<br>மஹாலிங்கபுரம், சென்னை, |
| 03.01.2004 | வைகுண்ட ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 05.01.2004 முதல்<br>10.01.2004 வரை | ''திருப்பாவை'' உபன்யாசம்<br>இடம் : ஸ்ரீ மதனகோபாலஸ்வாமி திருக்கோயில்,<br>மதுரை. |
| 11.1.2004<br>இரவு 7.00 - 8.30 | ''உபன்யாஸம்''<br>இடம் : ரமண ஸத்ஸங்கம்<br>நங்கநல்லூர், சென்னை - 600 061. |

**மங்களானி பவந்து**